விலை ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மாசி -05 | 17-02-2004 | செவ்வாய்க்கிழமை | ஓசை -364

S.M கோல்ட் ஹவுஸ்

காலத்தால் அழியாத
கண்கவர் தங்க
நகைகளை சுத்தமான
22 கரட் தங்கத்தில்
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள



S.M கோல்ட் ஹவுஸ்

இல:-48/1, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
T.P: 024-222 4247
(சி-9205) 077-6059672

# நிறைவேற்று அதிகாரமுள்ள சனாதிபதி முறையை மூன்றில் இரண்டு ஆதரவு இல்லாமலே ரத்துச் செய்வேன்

## சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவிப்பு

(கொழும்பு)

**நிறைவேற்று அதிகாரம் உடைய சனாதிபதி முறையை பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாமலேயே ரத்துச் செய்யப் போவதாக சனாதிபதி தெரிவித்துள்ளார்.**

நேற்று மஹரஎன்றஇடத்தில் இடம் பெற்ற கூட்டம் ஒன்றில் சனாதிபதி உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார். தமக்கு பொதுத் தேர்தலை நடத்துவதற்கு விருப்பமில்லாத போதும் அதற்கான அவசியம் ஏற்பட்டிருப்பதாக சனாதிபதி கூறினார். மக்கள் தீர்ப்பளித்தால் தாம் நாளையே நிறைவேற்று சனாதிபதி முறையை ஒழிக்கத் தயார் என கூறிய சனாதிபதி தமது பதவிக்காலம் இன்னும் மூன்று வருடங்களுக்கு இருப்பதாக அரசியலமைப்பு கூறுகின்ற போதும் சிலர் இரண்டு வருடங்களே தமது பதவி இருப்பதாகக் கூறுவதாகவும் சனாதிபதி தெரிவித்தார். (32)

## த.கூட்டமைப்பினர்-தமிழ்ச்செல்வன் இன்று கிளிநொச்சியில் சந்திப்பு

(அலுவலக செய்தியாளர்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

மேற்படி சந்திப்பு இன்று பகல் 11.00 மணிக்கு கிளிநொச்சியில் நடைபெறவுள்ளதென தெரியவந்துள்ளது.

தற்கால அரசியற்சூழல் தொடர்பாகவும், நடைபெறவுள்ள தேர்தல் தொடர்பாகவும் இச்சந்திப்பில் ஆராயப்படலாம் என்றும் தெரியவருகிறது.

(8ஆம் பக்கம் பார்க்க)

## கிறிஸ்தவ அலுவல்களுக்கான அமைச்சுப் பொறுப்பும் ஜோன் அமரதுங்கவிடமிருந்து பறிப்பு

### அவருக்கான பாதுகாப்பும் நீக்கம்

(கொழும்பு)

மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்ற பின்னர் கிறிஸ்தவ அலுவல்களுக்கான அமைச்சர் ஜோன் அமரதுங்க மீண்டும் சத்தியப் பிரமாணம் செய்யவில்லை என்பதால் அவர் அமைச்சராக தொடர்ந்து இருக்க முடியாது என சனாதிபதி சந்திரிகா அறிவித்துள்ளார்.

இதேவேளை ஜோன் அமரதுங்க தொடர்ந்து அமைச்சருக்கான பாதுகாப்பைப் பெற்று வருவதாகவும் அதனை நீக்கி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருக்கான பாதுகாப்பையே அவருக்கு வழங்குமாறு பொலிஸ்மா அதிபரை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எழுத்து மூலம் கேட்டுள்ளார்.

இதேபோன்று அமைச்சரவை அந்தஸ்து பெறாத அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் ஆகியோருக்

(8ஆம் பக்கம் பார்க்க)

## "விகாரமாதேவி" உடன்படிக்கையை ஆதரித்தால் ஐ.ம.சு.விடுதலை முன்னணியை ஆதரிப்போம்

### -தேசிய பிக்குகள் சங்கப் பேரவை பேரம்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர விடுதலை முன்னணி "விகாரமாதேவி" உடன்படிக்கையை எதிர்வரும் தேர்தலில் ஆதரிக்குமானால் தேசிய பிக்குகள் சங்கப் பேரவை முன்னணிக்கு ஆதரவு வழங்கும் என்று தெரிவித்துள்ளது.

சங்கத்தினால் அங்கீகரிக்கப் பட்டுள்ள உடன்படிக்கை இதுவாகும். இலங்கை சிங்கள மக்களது தாயகம் என்பதை ஏற்றுக் கொள்வது அவசியமாகும் என்றும் பேரவையின் நிறை வேற்று உறுப்பினரான சங்கைக்குரிய ஒமாபே சோபிததேரர் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஒரு நாடு அதனைப் பிளவுபடுத்த முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய பிக்குமார் சங்க பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட "விகாரமாதேவி" நடவடிக்கையில் இனத்துவ மொழி மத அடிப்படையில் இலங்கையைப் பிரிக்க முடியாது என அதில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உடன்படிக்கையின் ஒரு பகுதி சனாதிபதிக்கு அறிவிக்கப் பட்டுள்ளது. தமது கோரிக்கைக்கான பதில் இன்று பகல்பன்னிரண்டு மணிக்கு முன்னர் கிடைக்கு

(8ஆம் பக்கம் பார்க்க)

## 3 கோவில்களில் சிவராத்திரி நிகழ்வுகளை பகல் வேளையில் மட்டுமே நடத்த முடியும்

### - யாழ். இராணுவம் அறிவிப்பு

(வடமராட்சி)

தென்மராட்சியில் உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் அமைந்துள்ள மூன்று இந்து ஆலயங்களில் இம்முறை மகாசிவராத்திரி நிகழ்வு பகலில் மட்டும் நடத்த முடியும் என இராணுவம் அறிவித்துள்ளது.

கைதடி-நாவற்குழிப் பகுதிகளில் அமைந்துள்ள முருகன் கோவில் மற்றும் வள்ளியம்மன் ஆலயத்திலும், மறவன்புலோ பகுதியில் அமைந்துள்ள தோப்பூர் பிள்ளையார் கோவிலிலுமே வழிபாட்டிற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

குறித்த தினத்தன்று கோயிலாக்கண்டி இராணுவ முன்னரங்க பாதுகாப்பு நிலைப் பகுதியூடாக பக்தர்கள் வாகனங்களில், இராணுவப் பாதுகாப்புடன் ஆலயங்களுக்கு அழைத்துச் செல்லப்படுவர் எனவும், ஆயினும் பக்தர்கள் அன்றைய பகல் வேளை மட்டுமே அங்கு நின்று வழிபாட்டில் ஈடுபட முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(8ஆம் பக்கம் பார்க்க)

## மக்களிற்கு இயல்புவாழ்க்கையை ஏற்படுத்துவது பற்றி குடாநாட்டில் கண்காணிப்புக்குழு-புலிகள் பேச்சு

குடாநாட்டில் சட்டம், ஒழுங்கைப் பேணும் விடயத்தில் விடுதலைப்புலிகள் போதிய ஒத்துழைப்பினை நல்கிவருகின்ற போதிலும், பொலிசார் அவ்விடயத்தில் அக்கறை அற்று செயற்படுவதாக யாழ். மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.இளம்பருதி குற்றம் சாட்டியுள்ளார்.

குடாநாட்டிற்கான விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று வருகை தந்திருந்த போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் டொன் புறூவ் ஹேறாவ்டே உடனான சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களிடையே உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார். அவருடன் யாழ். மாவட்ட துணை அரசியல் துறைப்பொறுப்பாளர் செம்மணன் மற்றும் மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் கலைவிழி அரசியல் துறை பிரமுகர் இமையவன் ஆகியோர் கலந்துகொண்டனர். டொன்புறூவ் ஹேறாவ்டே தலைமையிலான குழுவில் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் கொழும்பு அலுவலகத்தைச் சேர்ந்த ஹிக்வோல்ஸ் மற்றும் அரசியல் ஆலோசகர் டோனி அனான் உடன் சமாதான செயலகத்தைச் சேர்ந்த ஓய்வு

(8ஆம் பக்கம் பார்க்க)

## தடைமுகாம்கள் இரவிலும் திறந்திருக்கும்

(அலுவலகசெய்தியாளர்)

திருக்கேதீஸ்வர சிவராத்திரி விழாவினை முன்னிட்டு கூட்டு நடவடிக்கை தலைமையகத்தினால் சில இராணுவத் தடைமுகாம்கள் இரவு பகலாக திறந்துவிடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் இன்று முதல் நாளை மறுதினம்வரை உயிலங்குளம், ஓமந்தை, மடு வீதி என்பன இரவு பகலாக திறந்திருக்குமெனவும் முகமாலை தடைமுகாம் இரவு 9.00 மணிவரை திறந்திருக்குமெனவும் கூட்டு நடவடிக்கைகள் தலைமையகம் தெரிவித்துள்ளது. (சோ)

## பொ.ஐ.மு., ஜே.வி.பி.யினர் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்

(கொழும்பு)

புத்தளம் மாவட்டத்தில் தேர்தல் வன்முறை ஒன்று நடைபெற்றுள்ளது.

புத்தளம் மாவட்ட பொ.ஐ.மு. பாராளுமன்ற உறுப்பினர் தெசோராவின் வீட்டில் சந்திப்பொன்று நடைபெற்று முடிந்தகையோடு அந்த வீட்டிற்கு வந்த குழு ஒன்று அங்கிருந்தவர்கள் மீது தாக்குதலை மேற்கொண்டது. இதில் இருவர் பலத்த காயங்களுக்குள்ளாகி ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விருவரில் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கும் மற்றவர் கத்திக்குத்துக்குமிலக்காகியுள்ளனர்.

இது தொடர்பாக தேடப்படும் ஐ.தே. கட்சியைச் சேர்ந்த பிரதேசசபை ஊழியர் தலைமறைவாகியுள்ளார்.

இதேவேளை அநுராதபுரத்திலுள்ள கடபொலக எனுமிடத்தில் உள்ள ஜனதா விமுக்திப் பெரமுனவின் மாவட்ட அலுவலகம் நேற்று அதிகாலை ஒருமணியளவில் தாக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரா டீபண்டாவின் ஆதரவாளர்களே இந்தத் தாக்குதலை மேற்கொண்டதாக ஜனதா விமுக்திப் பெரமுன குற்றம்சாட்டியுள்ளது.

## மிலிந்தவின் பதவி சொக்ஸிக்கு

(கொழும்பு)

பொருளாதார மறுசீரமைப்பு விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சராக கே.என். சொக்ஸி சிறிலங்கா சனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அமைச்சர் மிலிந்தமொறகொட இராஜினாமாச் செய்ததை அடுத்து அவரது இராஜினாமாவை சிறிலங்கா சனாதிபதி கடந்த பதின்மூன்றாம் திகதி ஏற்றுக் கொண்டதாக எழுத்து மூலம் அறிவித்ததைத் தொடர்ந்து இந்த நியமனத்தை சனாதிபதி செய்துள்ளார். அவர் வகித்த பிரதி அமைச்சர் பதவியை சனாதிபதி சந்திரிகா பறித்ததையடுத்து அவர் அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்தது தெரிந்ததே.

# தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவான மாணவர்கள் கௌரவிப்பு



(அலுவலகசெய்தியாளர்)
கிளிநொச்சிமாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவையும், கிளி. வலய கல்விப்பணிமனையும், தமிழீழ விளையாட்டுக்கழகமும் இணைந்து நடாத்தும் தேசியமட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பெற்ற மாணவ மாணவிகளைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று பி.ப 3.00 மணிக்கு நடைபெற்றது.

கிளி. வலயக்கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் தமிழீழ தேசியக்கொடியினை தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் கௌரி ஏற்றிவைக்க, மங்கல விளக்கினை கியூடெக் நிறுவன இணைப்பாளர் வணபிதா பீற்றர் அடிகள், தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா ஆகியோர் ஏற்றிவைத்தார்.

தலைமையுரையினை அடுத்து வரவேற்புரையினை உதவிக்கல்விப் பணிப்பாளர் பால்கேங்காதரன் நிகழ்த்தினார். தொடர்ந்து சிறப்புரையினை வணபிதா பீற்றர் அடிகள், தமிழீழ கல்விக்குழுத்தலைவர் கணேசபிள்ளை, தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, தமிழீழ விளையாட்டுக்கழக தலைவர் பத்மநாதன், கிளி. மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் கனகராசா ஆகியோர் நிகழ்த்தியதுடன் தேசியமட்டப் போட்டிக்கு தெரிவான மாணவர்களுக்குப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவித்தனர்.

நிகழ்வில் கிராமசேவை அலுவலர் பசுபதிப்பிள்ளை மற்றும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## உள்ளீடுகள் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)
உதயநகர் மேற்கு கிராமத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் வீட்டுத் தோட்டப் பயனாளிகளுக்கான உள்ளீடுகள், உபகரணங்கள் என்பன வடக்கு கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தில் வைத்து இன்று பிற்பகல் 3.00 மணிக்கு வழங்கப்படவுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் யு.என்.எச்.சி.ஆர் போரூட் நிறுவன நிதி உதவியுடன் வ.கி.அ.பு. நிறுவனத்தினரால் மேற்படி உள்ளீடுகளும் உபகரணங்களும் வழங்கப் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## மெய் வல்லுநர் போட்டி

(அலுவலக செய்தியாளர்)
முல்லை திருமுறிகண்டி இந்து வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி இன்று பிற்பகல் 1.00 மணிக்கு வித்தியாலய முதல்வர் ஆகூசைநாதர் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் மா.தேவேந்திரன் முதன்மை விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

மேற்படி இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டிக்கு அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் வேண்டி உள்ளனர். (சோ)


## 90 ஆம் நாள் நினைவலைகள்

பிறப்பு
26
10
1983



வீரச்சாவு
20
11
2003

# நாட்டுப்பற்றாளர் அகிலன்

நாகன் பிரதீபன்
[நாவற்காடு வரணி-யாழ்]

வானத்து நிலவாய் வைகறையில் உதிந்த
எம் அன்புச் செல்வமே அகிலனே!
உன் வதன முகம் காணாது
துடிக்கின்றோம் நாம் இங்கே!
கடமையே கண்ணென!
கருத்துடன் நீ செய்ய
மின்னென வந்த காலனவன்
மின்னென அடங்கிச் சென்று விட்டான்!
உன் ஆத்மா சாந்தி பெற இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

இன்று எம்து இல்லத்தில் நடைபெறும் 90 ஆம் நாள் நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு போராளிகள், பொதுமக்கள், நண்பர்கள், உற்றார், உறவினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல-119,
உதயநகர் கிழக்கு,
கிளிநொச்சி.

குடும்பத்தினர்.
சகோதரி-பூவிழி (போராளி)

(4244)


# வாகனப் பதிவு,சாரதி அனுமதிப்பத்திரத்திற்கு பெருமளவு விண்ணப்பங்கள்

(அலுவலகசெய்தியாளர்)
கிளி. மாவட்ட செயலகத்திலுள்ள போக்குவரத்து செயலகத்தில் நேற்றைய தினம் காலை முதல் மாலை வரை வாகனப் பதிவு மற்றும் சாரதி அனுமதிப்பத்திர பதிவுகளுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பெற்றது.



இதன்போது பெரும் எண்ணிக்கையில் விண்ணப்பதாரிகள் சமுகமளித்தமையின் காரணமாக கிளி. மாவட்ட மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகன் அவர்களின் பணிப்புரையின் பெயரில் மேலதிக பணியாளர்கள் கடமையிலீடுபடுத்தப்பெற்று பதிவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பெற்றது.

கிளி. மாவட்டத்திலுள்ள பதிவுகள் மேற்கொள்ளப்பெறாத வாகனங்களையும் மற்றும் வாகன சாரதி அனுமதிப்பத்திரத்திற்கு விண்ணப்பிப்பதற்கான இறுதித்தினம் நேற்று என்பது குறிப்பிடத்தக்கது.(சோ)


கரைதுறைப்பற்று ப.நோ.கூ. சங்க

## விசேட பொதுக்கூட்டம்

22.02.2004

கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்க விசேட பொதுச் சபைக் கூட்டம் எதிர்வரும் 22.02.2004 ஆம் திகதி காலை 9.30 மணியளவில் முல்லைத்தீவு மகாவித்தியாலய மண்டபத்தில் சங்கத்தலைவர் திரு.கி.சிவபாதம் அவர்கள் தலைமையில் நடைபெறவிருப்பதினால் அன்றைய தினம் பொதுச் சபை உறுப்பினர் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
பொதுமுகாமையாளர்/செயலாளர்.

(சி.9093)

## 1ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர் திரு. சந்தியா கதிரவேலு

தென்மதிபாய் வாணிப உரிமையாளர் அவர்களின் 1ஆம் ஆண்டு நினைவு நாளில் அவரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

வர்த்தக சங்கம்,
பொதுச் சந்தை,
கிளிநொச்சி.

(4243)

## கண்ணீர் அஞ்சலி

அமரர்.பொன்னையா மாணிக்கவாசகர்

கிளிநொச்சி கல்விவலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. பொன் தில்லைநாதன் அவர்களின் சகோதரரான அமரர். பொன்னையா மாணிக்கவாசகர் அவர்கள் 11.02.2004 அன்று கனடாவில் காலமானார். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கும் சகோதரரான திரு.பொன் தில்லைநாதன் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பூநகரிக் கோட்ட ஆரம்பக் கல்வி
அபிவிருத்திப் பிரிவு,
பூநகரி.

(4242)

## மீண்டெழும் பச்சிலைப்பள்ளி பளை நகரில்

மக்கள் நலனை மையமாகக் கொண்டு

இளந்தென்றல் வாணிபத்தினரால்

மற்றும் ஓர்

# இளந்தென்றல் தங்ககம்

இணைந்த குளியல் அறைகளுடன் கூடிய தங்கும் அறைகள் மற்றும் நவீன வசதிகளுடன் 18.02.2004 நாளை நண்பகல் 12.00 மணிக்கு இளந்தென்றல் தங்ககம் யாழ்.நெடுஞ்சாலை பளை நகரில் திறந்து வைக்கப்பெறவுள்ளது.

(சி-8793)

# ஐக்கிய நாடுகள் சபை மேற்பார்வையில் ஈராக் தேர்தல் நடைபெற வேண்டும்

## அயல் நாடுகள் கூடித் தீர்மானம்

**ஈராக்கில் நடைபெறவுள்ள தேர்தலை ஐ.நா.சபை மேற்பார்வை செய்ய வேண்டுமென்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

ஈராக்கின் எல்லை நாடுகள் குவைத்தில் நடத்திய இரண்டு நாட்கள் கூட்டத்தை நேற்று முன்தினம் முடித்துக் கொண்டுள்ளன.

ஈராக்கில் நடைபெறவிருக்கும் தேர்தலை ஐ.நா.சபை மேற்பார்வை செய்ய வேண்டுமென்றும், ஈராக்கிய மக்களிடம் அதிகார ஆட்சி மாற்றம் இடம்பெறும் போது அதனை ஐ.நா.சபை கண்காணிக்க வேண்டும் என்றும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஈராக்கிற்கும் அயல்நாடுகளுக்கும் அச்சுறுத்தலாகவுள்ள பயங்கரவாத, மற்றும் ஆயுத தாரிகள் அங்கிருந்து அகற்றப்பட வேண்டுமென்றும் அந்த தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கிய வெளிவிவகார அமைச்சர் இதுபற்றிக் கருத்துக் கூறுகையில்; தீவிரவாதிகளினால் மேற்கொள்ளப்படும் தாக்குதல்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு திட்டவட்டமான தீர்மானங்கள், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கூறியுள்ளார்.

சவூதி அரேபியா, ஜோர்தான், சிரியா, குவைத், துருக்கி, ஈரான் ஆகிய நாடுகள் இந்த இரண்டு நாட்கள் கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளன.




பிரான்சிலுள்ள பாடசாலைகளில் பயிலும் முஸ்லிம் மாணவிகள் பர்தா அணிந்து செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதால் அதற்கெதிராக பாரிசில் ஆர்ப்பாட்டம் நடத்தும் மாணவிகள்.

# அணுவாயுத தொழில்நுட்பம் தொடர்பான சீனாவின் போக்கு கண்டனத்திற்குரியது

## அமெரிக்க அதிகாரி கண்டனம்

(வாஷிங்டன்)

அணுவாயுதப்பரவலைக் கட்டுப்படுத்துவதாக உறுதியளித்துள்ள போதிலும் அணுவாயுதத் தொழில்நுட்பம் தொடர்பாக சீனா, பாகிஸ்தானுடன் ஒத்துழைத்து வருகின்றது என்று நம்புவதாக அமெரிக்க அதிகாரிகள் கூறியுள்ளார்கள்.

சவூதி அரேபியாவுக்கும் சீனா ஒத்துழைப்பு அளித்து வருவதாக அமெரிக்க அதிகாரிகள் குற்றம் சாட்டியுள்ளார்கள்.

அடுத்தவாரம் பெய்ஜிங்கில் சீனா மற்றும் அமெரிக்க அதிகாரிகளிடையேயான கூட்டத்தில் இது பற்றி விவாதிக்கப்படும் என்றும் அவர்கள் கூறியுள்ளார்கள்.

# பட்டம் ஏற்றும் விழாவில் 15பேர் பரிதாப மரணம்

(இஸ்லாமாபாத்)

லாசாரில் வசந்தகாலம் வருவதை முன்னிட்டு வருடாந்தம் பட்டம் பறக்கவிடும் விழாவில் நேற்றுமுன்தினம்15பேர் உயிரிழந்துள்ளார்கள்.300ற்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளார்கள்.

இருசக்கர வண்டிகளிலும் வீதிகளில் நடந்து சென்றவர்களின் கழுத்தினை பட்டத்தின் கூர்மையானநூல் இறுகியதாலேயே 15பேர் மரணமடைந்துள்ளனர்.

10வருடங்களுக்கு முன்னர் தொடக்கப்பட்ட இந்த வருடாந்த வசந்தகாலத்தை வரவேற்கும் பட்டம் பறக்கவிடும்விழா கடந்த வருடங்களைவிட இம்முறை அதிகமானவர்களைப் பலி கொண்டுள்ளது.

# குழப்ப நிலையை உருவாக்க எதிர்க்கட்சி முயலுகின்றது


## பங்களாதேஷ் அரசு குற்றச்சாட்டு

(டாக்கா)

பங்களாதேஷில் தொடரும் வேலை நிறுத்தங்களை எதிர்க் கட்சியான அவாமி லீக் தூண்டி விடுவதாகவும் நாட்டில் குழப்ப நிலையை ஏற்படுத்திவருவதாகவும் அரசாங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

இதேவேளை தொடரும் வேலை நிறுத்தங்களால் அசம்பாவிதங்களும் ஏற்பட்டுவருவதாகவும் கூறப்படுகிறது.

வேலை நிறுத்தங்களால் நாட்டின் பொருளாதார நிலை மேலும் மோசமடைந்து வருவதாக செய்திகள் வெளியாகியிருந்தமை தெரிந்ததே.



பங்களாதேஷ் பிரதமர் காலிதா ஷியாவின் ஆட்சிக்கு எதிராக தலைநகர் டாக்காவில் ஆர்ப்பாட்டம் நடத்தும் அவாமி லீக் கட்சியினரை அடக்கும் பணியில் ஈடுபட்டுள்ள பெண் பொலிசார்.

# இந்தியா-பாகிஸ்தான் வெளியுறவு மட்ட பேச்சுக்கள் திட்டமிட்டபடி ஆரம்பம்

## –காஷ்மீர் பிரச்சினையும் உள்ளடக்கம்

(இஸ்லாமாபாத்)

இந்திய பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சரின் இணையச் செயலர்கள் மட்டத்திலான பேச்சுவார்த்தைகள் நேற்று இஸ்லாமாபாத்தில் காலை 11.00மணிக்கு தொடங்கியது. இந்தப் பேச்சுவார்த்தைகள் இன்றும் நாளையும் தொடரவுள்ளது.

காஷ்மீர் உள்ளிட்ட பல பிரச்சினைகள் இந்தப் பேச்சுக்களில் ஆராயப்படவுள்ளது. இந்தியத் தரப்பில் வெளியுறவு அமைச்சின் இணையச் செயலர் அருண்குமார் ஷிண்டேயும், பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சின் இணையச் செயலர் தெற்காசியாவுக்கான இயக்குநர் ஜெலில் அப்பாத் டிலானிக்குமிடையே நேற்று பாகிஸ்தானின் வெளியுறவுச் செயலகத்தில் பேச்சுக்கள் ஆரம்பமாகியுள்ளது.

கடந்த சார்க் உச்சி மாநாட்டின் போது, பிரதமர் வாஜ்பாயும், பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப்பும் மீண்டும் தொடங்க ஒப்புக் கொண்ட பேச்சுவார்த்தைகளுக்கான பிரச்சினைகள், அதைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் என்பவற்றை உறுதிசெய்ய இரு அதிகாரிகளும் நேற்று கலந்துரையாடத் தொடங்கியுள்ளார்கள்.

இரு வெளியுறவு இணைச் செயலர்களும் புதன்கிழமை பேச்சுவார்த்தைகளுக்கான விதிமுறைகளை தேர்வு செய்வார்கள். தற்போதைய மூன்றுநாள் பேச்சுவார்த்தைகளையும் இந்தியாவும், பாகிஸ்தானும் "பேச்சுக்குப் பேச்சு" என்று வர்ணித்துள்ளன.

இரு நாடுகளும் விரிவான பேச்சுக்களுக்கு எட்டு அம்சங்களை 1997ஆம் ஆண்டு அடையாளம் கண்டு கொண்டன.

அமைதி, பாதுகாப்பு, காஷ்மீர், ஷியாட்சின், முலாபரத் பயங்கரவாதம், போதைப்பொருள் கடத்தல், பொருளாதாரம், வர்த்தகம், நட்புப் பரிமாறல் என்பன அவையாகும்.

### அப்துல் காதிர்கான் நிலை கவலைக்கிடம்!

ஏனைய நாடுகளுக்கு ரகசியமான முறையில் அணுவாயுதத் தகவல்களை அறிந்ததாக குற்றம் சாட்டப்பட்ட பாகிஸ்தானின் அணு விஞ்ஞானி அப்துல் காதிர் கானுக்கு மாரடைப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அவருக்கு மருத்துவ சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்ற போதும், அவரது நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் ஹான் ஆராய்ச்சி கூடத்தின் மருத்துவ வட்டாரங்கள் கூறியுள்ளன என்று பாகிஸ்தான் நாளேடு கூறியுள்ளது.

# பாகிஸ்தானில் நில நடுக்கம் 22 பேர் பலி; பலர் காயம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் சனிக்கிழமை இடம்பெற்ற தொடர் நிலநடுக்கத்தில் 22பேர் உயிரிழந்துள்ளனர். தலைநகர் இஸ்லாமாபாத்திற்கு வடக்கேயுள்ளமலைப் பிரதேசமான மான்சரா மாவட்டத்தில் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது.நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகள் தரைமட்டமாயின நிலநடுக்கம் காரணமாக மலைப்பகுதியில் பாறைகள்சரிந்து வீழ்ந்தன. இவற்றில் சிக்கி பலர் உயிரிழந்துள்ளனர். ஏராளமானோர் காயமடைந்துள்ளனர். இந்நிலையில் நேற்று முன்தினம் பெசாவரில் நிலநடுக்கம் ஏற்பட்டது. றிக்டர் அளவு கோலில் 4.3எனப் பதிவாகியுள்ளது இந்த நிலநடுக் கத்தால் சேதங்கள் ஏற்பட்டதா என்பது குறித்து தகவல் வெளியாகவில்லை.



காஷ்மீரின் சிறிநகருக்கு 80கி.மி. தொலைவிலுள்ள யூரிஎன்ற இடத்தில் அமைக்கப்பட்ட பாகிஸ் தான் கட்டுப்பாட்டு காஷ்மீரையும் இந்தியாவையும் இணைக்கும் புதியபாலத்தில் காவல் கடமையிலீடுபட்டுள்ள இராணுவத்தினர்.

# அணுசக்தி எரிபொருள் தயாரிக்கும் திறனை பிறநாடுகளுக்கு விற்க ஈரான் உத்தேசம்!

(தெஹ்ரான்)

அணுசக்தி எரிபொருளை தயாரிக்கும் திறன் தன்னிடம் இருப்பதாக ஈரான் தெரிவித்துள்ளது.

அவற்றை ஏனைய நாடுகளுக்கு விற்கவும் ஈரான் திட்டமிட்டுள்ளது.

ஆனால் அணுவாயுதங்களைத் தயாரிக்கும் எண்ணம் தமக்கில்லை எனவும், சர்வதேச அணுசக்தி ஏஜென்சியுடன் ஒத்துழைக்கப்போவதாக ஈரானின் வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானிலிருந்து ஈரானுக்கு இரகசியமாக அணுவாயுதத் தொழில்நுட்பம் வழங்கப்பட்ட தகவல்கள் உறுதி செய்யப்பட்ட நிலையில் ஈரான், ஒரு அச்சுறுத்தல் மிகுந்த நாடாக விளங்கி வருவதாக அமெரிக்கா குற்றம் சாட்டி வருகின்றமை தெரிந்ததே.

### வேண்டுகை!

ஈராக்கில் அதிகரித்து வரும் தாக்குதல்களைக் கட்டுப் படுத்துவதற்குஅயல் நாடுகள் முன்வர வேண்டும் மென்று அமெரிக்க கூட்டுப்படையினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சவூதி அரேபியாவிலிருந்து ஈராககினுள் ஊடுருவிவரும் அல் ஹைதா உறுப்பினர்களே தாக்குதல்களை தீவிரப்படுத்தியிருப்பதாக அமெரிக்க கூட்டுப் படை கூறியுள்ளது.



மொஸ்கோவிலுள்ள நீச்சல் தடாகத்திலுள்ள கட்டடத்தின கூரை இடிந்து விழுந்ததில் காயப்பட்ட சிறுவனை மீட்டு பணியாளர் தூக்கிச் செல்கிறார்.





# 3வது தேசிய பெருவிளையாட்டு விழா ஏற்பாடுகள் பூர்த்தி- அணிகள் தீவிரபயிற்சி:


உதைபந்தாட்டப் பயிற்சியாளருடன் வீரர்கள்

தமிழர் தாயகத்தின் மூன்றாவது தேசிய பெருவிளையாட்டுப் போட்டிகள் வரும் 20ஆம் திகதி ஆரம்பமாவதையிட்டு அதற்கான ஏற்பாடுகள் கிளிநொச்சியில் நிறைவடையும் தறுவாயில் உள்ளது.

இதுவரை நடைபெற்று முடிந்த இரண்டு தேசிய பெரு விளையாட்டுப் போட்டிகளை பார்க்கிலும் இம்முறை நடைபெறவுள்ள போட்டிகள் பல்வேறு எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தியுள்ளதால் மாவட்ட அணிகளின் வீரர்களிடையே போட்டித்தன்மை அதிகரித்துள்ளது. இதனை மைதானங்கள் பயிற்சி வீரர்களால் நிரம்பிக் காணப்படுவதன் மூலம் உணரமுடிகின்றது.

இதில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட வீரர்கள்


தீவிரபயிற்சியில் ஈடுபட்டிருக்கும் கிரிக்கெட் அணியினர்.

கடந்தகால போட்டிகளில் ஏற்பட்ட பின்னடைவுகளுக்கான காரணத்தை இனம் கண்டு 3வது தேசிய பெருவிளையாட்டுப் போட்டியின் அனைத்துப் போட்டிகளிலும் வினைத்திறனுடன் கலந்து கொள்வதற்கான அணிகளைத் தயார் படுத்துவதில் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளதையும் காணக்கூடியதாகவுள்ளது. இது இவ்வாறிருக்க ஏனைய மாவட்ட அணிகளும் இதனை முன்கூட்டியே அறிந்துள்ளதால் முன்னரைவிட பலம்வாய்ந்த அணிகளை இம்முறை அறிமுகம் செய்யும் என்பதில் சந்தேகமில்லை.

கடந்த போட்டிகளில் போரின் வலியால் பாதித்திருந்த தாயகத்தின் ஒருசில மாவட்ட அணிகள் (கிளிநொச்சி, முல்லைத்தீவு) விளையாட்டின் தரங்களையும், நுட்பங்களையும் அறியமுடியாது ஏனைய மாவட்டங்களிடம் முதல்போட்டியிலேயே தோல்வியைச் சந்தித்தன. இம்முறை அந்நிலை ஓரளவு நீங்கி இரண்டுவருட சமாதானகாலம் அதில் இருந்து விடுபட்டு ஏனைய அணிகளின் தரங்களை தரம்பிரித்து அறிந்துகொள்ள சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. எனவே இம்முறை இம் மாவட்டங்கள் எந்த சாக்குபோக்கையும் கூறிக்கொண்டு இருக்க ம்டியாது அதனை ரசிகர்களும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

இந்த நிலையில் அணிகளைப் பலப்படுத்தும் தீவிர முயற்சியில் தமிழீழ விளையாட்டுத்துறையின் மாவட்டப் பொறுப்பாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

எனவே இவை அனைத்தும் இம்முறை நடைபெறப் போகும் போட்டிகள் சர்வதேச போட்டி ஒன்றை தமிழீழத்திலிருந்து கொண்டு நேரடியாகப் பார்க்கும் உணர்வை ரசிகர்களிடையே ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

இச்சுற்றுப் போட்டி குறித்து தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா தெரிவிக்கும் போது,

எமது மக்களின் தேசிய அடையாளங்களை வெளிக்கொணரும் முயற்சியாகவே விளையாட்டுத்துறை எமது தேசியத் தலைவரின் சிந்தனையில் தோற்றம் பெற்றது எனத் தெரிவித்த அவர், இந்தச் சுற்றுப் போட்டியில் பல்லாயிரக் கணக்கானோர் கலந்துகொள்வர் எனவும் இந்த சுற்றுப்போட்டியின் சுமைகளை விளையாட்டு ஆர்வலர்களான எமது உறவுகளும், வணிகப் பெருமக்களும் சுமந்து கொள்வதில் தோள்கொடுத்துள்ளனர் எனத் தெரிவித்தார்.

இதேவேளை நடைபெறவுள்ள போட்டிகள் தொடர்பான அட்டவணையை தமிழீழ விளையாட்டுத்துறை வெளியிட்டுள்ளது.

### உதைபந்தாட்டப் போட்டி

| குழு-அ | குழு-ஆ |
|---|---|
| அம்பாறை | மட்டக்களப்பு |
| கிளிநொச்சி | திருமலை |
| மன்னார் | முல்லைத்தீவு |
| வவுனியா | யாழ்ப்பாணம் |

### கிரிக்கெட்போட்டி

| குறுப்-1 | குறுப்-2 |
|---|---|
| வவுனியா | அம்பாறை |
| மன்னார் | திருமலை |
| யாழ்ப்பாணம் | முல்லைத்தீவு |
| கிளிநொச்சி | மட்டக்களப்பு |

### கிளித்தட்டு போட்டி(ஆண்)

| குறுப்-1 | குறுப்-2 |
|---|---|
| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி |
| மன்னார் | மட்டக்களப்பு |
| அம்பாறை | முல்லைத்தீவு |
| திருமலை | வவுனியா |

### கிளித்தட்டு போட்டி(பெண்)

| குறுப்-1 | குறுப்-2 |
|---|---|
| திருமலை | கிளிநொச்சி |
| மட்டக்களப்பு | முல்லைத்தீவு |
| யாழ்ப்பாணம் | மன்னார் |
| அம்பாறை | வவுனியா |

### கபடிப்போட்டி (ஆண்)

| குறுப்-1 | குறுப்-2 |
|---|---|
| கிளிநொச்சி | திருமலை |
| அம்பாறை | மன்னார் |
| முல்லைத்தீவு | மட்டக்களப்பு |
| வவுனியா | யாழ்ப்பாணம் |

### கபடிப்போட்டி (பெண்)

| குறுப்-1 | குறுப்-2 |
|---|---|
| கிளிநொச்சி | வவுனியா |
| அம்பாறை | யாழ்ப்பாணம் |
| மட்டக்களப்பு | மன்னார் |
| திருமலை | முல்லைத்தீவு |

### கரப்பந்து போட்டி(ஆண்)

| குறுப்-1 | குறுப்-2 |
|---|---|
| மன்னார் | முல்லைத்தீவு |
| திருமலை | வவுனியா |
| மட்டக்களப்பு | அம்பாறை |
| கிளிநொச்சி | யாழ்ப்பாணம் |

### கரப்பந்து போட்டி(பெண்)

| குறுப்-1 | குறுப்-2 |
|---|---|
| மட்டக்களப்பு | மன்னார் |
| யாழ்ப்பாணம் | வவுனியா |
| முல்லைத்தீவு | அம்பாறை |
| திருமலை | கிளிநொச்சி |

### வலைப்பந்தாட்டப்போட்டி

| குறுப்-1 | குறுப்-2 |
|---|---|
| மன்னார் | முல்லைத்தீவு |
| வவுனியா | திருமலை |
| மட்டக்களப்பு | கிளிநொச்சி |
| அம்பாறை | யாழ்ப்பாணம் |

20ஆம் திகதி முதல் 27ஆம் திகதிவரை நடைபெறவுள்ள இப்போட்டிகளில் துடுப்பாட்டத்தைத் தவிர ஏனைய போட்டிகளில் கணிசமான போட்டிகள் மின்னொளியில் நடைபெறவுள்ளது. இதில் உதைபந்தாட்டப் போட்டி மாத்திரம் லீக் முறையில் நடைபெறுவதுடன் ஏனைய போட்டிகள் விலகல் முறையில் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சவால் நிறைந்த சிறிலங்கா சுற்றுலா

சிறிலங்கா அணியுடனான ஐந்து ஒருநாள் போட்டிகளில் கலந்து கொள்வதற்கான உலகத் தரம் வாய்ந்த அவுஸ்திரேலிய அணி கடந்த சனி அதிகாலை சிறிலங்கா வருகை தந்தது.

44நாள் சுற்று பயணத்தை மேற்கொண்டு சிறிலங்கா வந்துள்ள மேற்படி அவுஸ். அணி மூன்று டெஸ்ட் போட்டியிலும் கலந்து கொள்கின்றது.



இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஒருநாள் போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை தம்புள்ள ரிங்கிரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

பலம்வாய்ந்த துடுப்பாட்ட பந்து வீச்சு வரிசையைக் கொண்டுள்ள ரிக்கிபொன்டிங் தலைமையிலான அவுஸ்திரேலிய அணியில் உபதலைவர் அடம் கில்கிறிஸ்ட், மத்தியூஹெயிடன், டேமியன் மாட்டின், மைக்கல்பெவன், மைக்கல் கிளாக், சைமன் ஹட்ரிச் ஆகியோர் துடுப்பாட்ட வரிசையை அலங்கரிக்கின்றனர்.

அன்ரு சைமன் அவுஸ்திரேலியாவின் நம்பிக்கைக்குரிய ஒரே ஒரு சகலதுறை வீரராக திகழ்கின்றார். சுழற்பந்து வீச்சை பொறுத்தவரை ஷேன்வோர்ன் இடம்பெறுவது சந்தேகத்துக்குரிய நிலையில் பிரெட்ஹொக்குடன் இணைந்து அன்ரூஷைமன் செயற்படுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கிலெஸ்பி, பிரெட்லீ ஆகியோர் அவுஸ்திரேலிய வேகப்பந்து துறைக்குத் தலைமை தாங்குவதுடன் பிரெட் வில்லியம், இயன் ஹாவீ, மைக்கல் கஸ்பரோவிச் ஆகியோர் அவர்களுக்கு துணையாக விளங்குவர் என நம்பப்படுகின்றது.

உலகச் சம்பியன்களான அவுஸ்திரேலிய அணி தனது தாயகத்தில் ஒருநாள் முக்கோணத்தொடரில் சிறப்பான வெற்றிகளைப் பெற்று உற்சாக நிலையில் சிறிலங்காவுக்கு வருகை தந்துள்ளமை சிறப்பம்சம்.

அத்துடன் முக்கோண இறுதிப்போட்டியில் இந்திய அணியை இலகுவாகத் தோற்கடித்த அவுஸ்திரேலிய அணி வெற்றிக் கிண்ணத்தைச் சவீகரித்திருந்தது.

சிறிலங்கா அணியைப் பொறுத்தவரை துடுப்பாட்டத்தில் சனத் ஜெயசூரிய, மாவன் அத் தப்



பத்து,குமார்சங்கக்கார, மஹேல ஜெயவர்த்தன ஆகியோர் நம்பிக்கைக்குரியவர்களாக திகழ்கின்ற போதும் பெரிதாக எதனையும் சாதிப்பார்களா என்பது கேள்வியே.



ஏனெனில் அண்மையில் சிறிலங்காவிற்கு சுற்றுலாவை மேற்கொண்டிருந்த இங்கிலாந்து அணியுடனான போட்டியில் மஹேலஜெயவர்த்தனவை தவிர ஏனைய வீரர்கள் பெரிதாக சோபிக்கவில்லை.

இந் நிலையில் பின்வரிசை



யில் புதிய இளம் வீரர்களை கொண்டுள்ள சிறிலங்கா அணி அவுஸ்திரேலியா பந்து வீச்சை தாக்குபிடிக்குமா என்பது கேள்விக்குரிய ஒன்றாக இருக்கின்ற போதும் அணித்தெரிவே பெரும் பங்கு வகிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது இவ்வாறிருக்க ஏற்கனவே பலசாதனைகளை நிகழ்த்தியுள்ள முரளிதரன் வேகப்பந்து வீச்சாளர் சமிந்தவாஸ் ஆகியோர் சிறிலங்கா அணிக்குபலம் சேர்ப் பார்கள்.என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.

அத்துடன் தமது சொந்த மண்ணில் இலகுவில் தோற்கடிக்கப்பட முடியாத அணியாக சிறிலங்கா அண்மைக்காலமாக திகழ்வதால் போட்டித் தொடர் பரபரப்பானதாகவே இருக்கும் என்பது ரசிகர்களின் கருத்தாகவுள்ளது.

# தாய்ப்பாலின் சிறப்பு

குழந்தைகளுக்கு தாய்ப்பால் தான் எல்லாவகைச் சத்துக்களும் நிறைந்த ஓர் நிறையுணவு ஆகும். இதனால் ஏற்படும் நன்மைகள் பெருமளவில் இருக்கின்ற போதிலும் அது குறித்து அதிகம் அறிந்து கொள்ளாதவர்களாகவே எம்மில் பலர் உள்ளனர்.

தற்காலத்தில் தாய்ப்பால் தவிர்ந்த ஏனைய குழந்தைகளுக்கான புட்டிப்பால் வகைகள் கவரக்கூடிய விதங்களில் வருகின்ற போதிலும் அவற்றால் தாய்ப்பாலில் எதிர்பார்க்கப்படும் நன்மைகளைப் பெறமுடியாதுள்ளது. குழந்தைகளின் உடல், உள வளர்ச்சி நோய் எதிர்ப்பு சக்திக்கும் மற்றும் தாயின் நலத்திற்கும் தாய்ப்பாலை குறிப்பிட்ட காலம்வரை குழந்தைகளுக்கு கொடுப்பதே சிறப் பானதாகும். இதனை அனைத்து பாலூட்டும் தாய்மார்கள் உணர்ந்து செயற்பட்டால் குழந்தைகளின் எதிர்காலத்தை சிறப்பான முறையில் அமைத்துக்கொள்ள உதவலாம்.

### தாய்ப்பால் ஊட்டும் முறை


* குழந்தைக்கு பாலூட்டுவதற்கு முன்னர் இளஞ்சூட்டு நீரினால் மார்பகங்களைக் கழுவுதல் வேண்டும்.
* குழந்தை பிறந்த அரை மணித்தியாலத்துக்குள் தாய்ப்பால் கொடுத்தலை ஆரம்பித்தல் வேண்டும்.
* பிறந்து முதல் 4மாதங்கள் பூர்த்தியாகும் வரை தாய்ப்பால் மட்டும் கொடுக்கவேண்டும்.
* குழந்தை பால் கேட்கும் எந்த வேளைகளிலும், எக்கட்டுப்பாடுமின்றி பால் கொடுக்க வேண்டும்.
* பாலூட்டும் வேளைகளில் முலைக்காம்பை மட்டுமன்றி, முலை முகத்தையும் முழுமையாக வாயால் கவ்விக்கொண்டு பாலைக்குடிக்கப் பழக்க வேண்டும்.
* குழந்தை சரியான முறையில் பாலை உறிஞ்சிக் குடிக்கப் பழக்க வேண்டும்.
* குறிப்பாக இரவு வேளையில் தாய்ப்பாலை ஊட்ட வேண்டும்.
* படுத்த நிலையிலிருந்து குழந்தைக்கு பாலூட்டுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.
* பாலூட்டும் வேளைகளில் மார்பகத்தைப் பிடித்த நிலையில் குழந்தைக்கு கொடுக்க வேண்டும்.

### தாய்ப்பால் கொடுப்பதனால் ஏற்படும் நன்மைகள்

* இலகுவாகக் கிடைக்கக்கூடியது.
* பிள்ளை பால் கேட்கும் எந்த வேளைகளிலும், எந்தவிதமான கட்டுப்பாடுகளுமின்றி பாலை ஊட்டலாம்.
* போசாக்கு நிறைந்தது.
* குழந்தையினுடைய உடல் ஆரோக்கியத்திற்கு ஏதுவானது. (உடல் வெப்பநிலை பேணப்படும்)
* தொற்று நீக்கப்பட்டது.
* நோய் எதிர்ப்புச் சக்தியினை அதிகரிக்கக்கூடியது.
* பிறப்பிலிருந்து 4மாதங்கள் வரை குழந்தைக்கு தேவையான சகல ஊட்டச்சத்துக்களையும் தாய்ப்பால் கொண்டுள்ளது.
* தாய்ப்பாலூட்டுதல் குழந்தையின் வளர்ச்சியையும், விருத்தியையும் உறுதிப்படுத்தும் வழியாக அமைகிறது.
* பிறநோய்களிலிருந்து தாய்ப்பால் குழந்தையைப் பாதுகாக்கிறது.
* ஆரோக்கியமான குழந்தையாக தாய்ப்பால் உருவாக்குகின்றது.
* தாய்ப்பாலானது ஒருதாய் தனது குழந்தைக்கு வழங்கக்கூடிய மிகச்சிறந்த உணவாக விளங்குவதுடன், குழந்தையின் சுகவாழ்விற்கும், பாதுகாப்பிற்கும் உதவுகிறது.
* தாய்ப்பால் கொடுப்பதன் மூலம் தாய்க்கும், குழந்தைக்குமிடையிலான நெருங்கிய உறவுப்பிணைப்பு உண்டாகும்.

### புட்டிப்பால் கொடுப்பதனால் ஏற்படும் தீமைகள்

* இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியாதது விலை கூடியது.
* தொற்று நீக்குவ்தில் பிரச்சனையிருப்பின் குழந்தையின் உடல் நிலையில் பாதிப்புக்கள் ஏற்படலாம்.
* உடல் வெப்பநிலைக்கு இசைவாக அன்றி பாலானது அதிக சூடாக அல்லது பழுதடைந்த நிலையிலுமிருக்கலாம்.
* அதிகளவான பாலினை கொடுக்கின்ற சந்தர்ப்பங்களில் குழந்தையின் முதிர்ச்சியடையாத சிறுநீரகங்களில் பர்தமானது அழுத்தத்தினைக் கொடுக்கலாம்.
* நிரம்பிய கொழுப்பு சமிபாடைய க்டினமானது.
* கல்சியமும், பொஸ்பரசும் ஆரோக்கியமான எலும்புகள் உருவாகுவதை தடுக்கும்.
*பாரமூலகங்கள் முதிர்ச்சியடையாத குழந்தையின் சிறு நீரகத்தைப் பாதிக்கும்.
* பாலானது குறைவாக கொடுக்கின்ற வேளைகளில் இரும்புச் சத்து, சோகை நோயை ஏற்படுத்தும்.
* விற்றமின்கள் மந்த வளர்ச்சியைக் கொடுக்கும்.
* அத்தியவசியமான கொழுப்பு அமிலங்கள், மந்தமான மூளை.
* கனியுப்புக்கள் (துயஅன்நாகம்) உள, உடலின் சீரற்ற வளர்ச்சிக்கு காரணமாகின்றது.
* நோய் எதிர்ப்பு சக்தி குறைவடையும்.
*தாய்க்கும், குழந்தைக்குமிடையிலான பிணைப்பு குறைவாக விருக்கும்.
* சூப்பிமூலம் இலகுவாக பாலை உறிஞ்சிப் பழகிக் கொண்ட குழந்தை தாயிலிருந்து பாலைக்குடிகக தயக்கம் காட்டும்.
* குழந்தைக்கு தேவையான நிறையுணவு பூர்த்தி செய்யப படமாட்டாது.



**செல்வி காயத்திரி**
மருத்துவ மாணவி,
திலீபன் மருத்துவத்துறை.

---

*-நாரந்தனவில் வர்த்தகரிடமிருந்து-*

## மிகச் சிறிய கைத்துப்பாக்கி பொலிசாரால் மீட்பு

(கொழும்பு)

சிறிலங்காவில் இதுவரை கண்டு பிடிக்கப்பட்ட கைத் துப்பாக்கிகளில் மிகவும் சிறிய தன்னியக்கத் துப்பாக்கி என்று கருதப்படும் ஆயுதம் ஒன்றை நாரந்தன பிரதேசத்தில் இருந்து பொலிசார் மீட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி கைத்துப்பாக்கி வர்த்தகர் ஒருவரின் வீட்டில் இருந்து கைப்பற்றப்பட்டதாகவும், பேலியகொட விசேட குற்றப்புலனாய்வுப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி கைத்துப்பாக்கி இத்தாலியில் உற்பத்தி செய்யப்பட்டது எனவும், இது போன்றதொரு கைத்துப்பாக்கி சிறிலங்காப் படையினரிடம் கூட இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இது இவ்வாறிருக்க மேற்படி துப்பாக்கி வைத்திருந்ததாகக் கூறப்படும் வர்த்தகர் இதனை தான் இராணுவத்தைச்சேர்ந்த ஒருவரிடம் இருந்தே வாங்கியதாகத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேற்படி வர்த்தகரும் இராணுவச்சிப்பாயும் மேலும் ஒருவருமாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என விசேட குற்றத் தடுப்புப் பிரிவின் பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

## வடக்கு-கிழக்கில் சுயேட்சைக் குழுக்கள் போட்டியிடும் வாய்ப்பு மிகக் குறைவு!

வடக்கு-கிழக்கில் தமிழ் தரப்பில் சுயேட்சைக் குழுக்கள் போட்டியிடுவதற்கான வாய்ப்புக் குறைவு என்று கணிப்புகள் கூறுகின்றன.

யாழ். மாவட்டத்தில் கூட்டமைப்பிற்குப் பிறம்பாக ஒரு சுயேட்சைக் குழு போட்டியிடலாம் என்று எதிர்பார்க்கப் படுகின்றது கட்சிகளைப் பொறுத்தவரை ஈ.பி.டி.பி தனித்தோ அல்லது சார்பு நிலை பெற்றவர்களுடனோ இணைந்து போட்டியிடவுள்ளது.

பெரும்பான்மைக் கட்சிகள் இம்முறை யாழ்ப்பாணத்தில் நேரடியாக போட்டியிடும் சாத்தியம் அரிதாகவேயுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. வன்னியில் தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு புறம்பாக தமிழ்தரப்பில் புளொட், ஈ.பி.டி.பி. என்பன போட்டியிடவுள்ளன.

*-தேர்தல் பிரசாரத்திற்கு-*

## அரச உடமைகளை பயன்படுத்தத் தடை!

(கொழும்பு)

தேர்தல் பிரச்சாரத்திற்கு அரசாங்க உடமைகள் பயன்படுத்தப்படுவது தடைசெய்யப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் அறிவித்துள்ளர்.

அசையும், அசைவற்ற அரச உடமைகளின் பாதுகாவலர்கள் தமது இந்தப்பணிப்புரைக்கு அமைய தேர்தல்காலத்தில் நடந்துகொள்ளவேண்டுமென்று தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.தேர்தல் ஆணைக்குழுவொன்று அமைக்கப்படும்வரை தமது அதிகாரங்கள் பிரயோகிக்கப்படும் என்று அறிக்கைமூலம் தெரிவித்துள்ளார்.

## யுத்தத்தை நிறுத்த அதற்கான காரணத்தைக் கண்டறிய வேண்டும்

### சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள யுத்தத்தை இல்லாது ஒழிக்க வேண்டுமானால் யுத்தத்திற்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றை நீக்க செயற்பட வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அனைத்து இன மக்களுக்கும், அனைத்து மதங்களுக்கும் கௌரவமாக வாழ்ந்து முன்னேற்றக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும். இதுவே, தான் புத்தபெருமானின் போதனையில் இருந்து கிடைத்த பாடங்கள்.

அதனால் இந்த யுத்தநிறுத்தத்தினால் யுத்தம் நிறுத்தப்பட்டுள்ளதால் யுத்தத்திற்கான காரணத்தைக் கண்டறிந்து அனைவராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வொன்றை காண முயற்சி செய்யவேண்டும்.

நேற்றுமுன்தினம் ரஜமகாவிகாரையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

*-அனைத்து ஊழியர்களுக்கும் சம்பளஉயர்வு கோரி-*

## சுகாதார சேவைகள் தொழிற்சங்க கூட்டமைப்பு இன்றுமுதல் காலவரையறையற்ற வேலை நிறுத்தம்!

(கொழும்பு)

சுகாதார சேவைகள் தொழிற்சங்கக் கூட்டமைப்பு இன்று செவ்வாய்க்கிழமை முதல் காலவரையறையற்ற வேலை நிறுத்தத்தை ஆரம்பிக்கவுள்ளது.

சுகாதார சேவைகள் தொழிற்சங்க சம்மேளனத்தின் ஏற்பாட்டாளர் சமன் ரத்னபிரிய கூறுகையில்,

சுகாதார அமைச்சு எடுத்த தீர்மானத்திற்கு ஆட்சேபனை தெரிவிக்கும் வகையில் வேலை நிறுத்தத்தில் நாங்கள் இறங்கப்போவதாக கூறியுள்ளார்.

அங்கீகரிக்கப்பட்ட 75 சதவீத சம்பள ஏற்றத்தைத் தாதிமார்களுக்கும், உபமருத்துவ உத்தியோகத்தர்களுக்கும் மட்டுமே வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

சம்பள அதிகரிப்பில் ஒருசீராக 60 சதவீதத்தை எல்லா சுகாதார ஊழியர்களுக்கும் வழங்குவது என்ற அமைச்சின் தீர்மானத்திற்கு சம்மேளனம் இணங்கியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அமைச்சு கூறியவாறு நிதிப் பற்றாக்குறை இருக்க வில்லையென்று ரத்னபிரிய குற்றம் சாட்டியுள்ளார்.

சம்பள அதிகரிப்பு முழு ஊழியர்களுக்கும் வழங்கப்படவேண்டுமென்பது சம்மேளனத்தின் நிலைப்பாடு ஆகும். இதேவேளை பதிவு செய்யப்பட்ட மற்றும் உதவி அரசாங்க வைத்தியர்களின் போராட்டம் ஆறாவது நாளாக தொடர்கின்றது, சம்பளத்திற்கான வேலை எனும் அடிப்படையில் அவர்கள் செயற்படுகின்றார்கள். தமது சம்பள முரண்பாட்டை நீக்க வேண்டும் என்பது அவர்களது கோரிக்கை ஆகும்.

## புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளில் வாக்கெடுப்பு கண்காணிப்பு குழுவுடன் விரைவில் ஆலோசனை

### -தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வாக்கெடுப்பு நடத்துவது குறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருடன் ஆலோசிக்கவுள்ளதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க கூறியுள்ளார்.

தேர்தல்நடவடிக்கைகள் குறித்து மாவட்ட அரசாங்க அதிபர்கள், மற்றும் உதவி அரச அதிபர்களுடன் பேச்சு வார்த்தை நடத்திய போதே தேர்தல் ஆணையாளர் இதனைத் தெரிவித்துள்ளார்.

2001 ஆம் ஆண்டு தேர்தலில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தின் மக்கள் வாக்கெடுப்பில் கலந்து கொள்வதற்கு படையினர் தடைவிதித்துள்ளதாக தெரிவித்த ஆணையாளர், இது போன்ற சம்பவங்கள் இம்முறை நடைபெறக்கூடாது என்று படையதிகாரிகளிடம் கேட்கவுள்ளதாகவும் கூறியுள்ளார்.கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பில் 79000 வாக்காளர்களும், திருகோணமலையில் 15ஆயிரத்துக்கும் அதிகமான வாக்காளர்களும், வடக்கில் 90ஆயிரத்துக்கும் அதிகமான வாக்காளர்களும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் வாழ்ந்து வருகின்றார்கள் என்றும், இவர்களை வாக்களிக்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுபவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# அமைதி, பொருளாதார உறுதிப்பாட்டை சி.சு.க-ஜே.வி.பி கூட்டணி அரசு உருவாக்கும்

## சிறிலங்கா சனாதிபதி கூறுகிறார்

(கொழும்பு)

**சிறிலங்கா சுதந்திரக்கட்சி, மக்கள் விடுதலை முன்னணி ஆகியவற்றின் புதியகூட்டு அரசாங்கம் ஊழலற்ற அரசியலுலகை ஏற்படுத்துமென்று சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.**

ஏப்பிரல் மாதம் நடைபெறவுள்ள பொதுததேர்தலில் ஐக்கியமக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெறுவதற்கு வலுவான ஆணையை வழங்குமாறு சனாதிபதி மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதன்மூலம் நாட்டில் அமைதியை ஏற்படுத்த முடியும். பொருளாதார ஸ்திர நிலையையும் ஏற்படுத்த முடியுமென்று அவர் கூறியதுடன்

அரசியல் யாப்பு மற்றும் தேர்தல் சீர்திருத்தங்களைக் கொண்டுவருவதற்கும் மக்களின் ஆணை முக்கியமானதென்றும் சனாதிபதி கூறியுள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறை ஒழிக்கப்பட வேண்டும் என்று தெரிவித்த சனாதிபதி, நிறைவேற்று அதிகாரமுடைய சனாதிபதி முறையானது அதிகாரப் பிரயோகத்திற்கு இடமளிக்கக் கூடியது என்று அவர் கூறியுள்ளார்.

நகரத்தேர்தல் தொகுதி ஒன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்திலேயே சனாதிபதி இவ்வாறு கூறியுள்ளார்.

வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு பேச்சுவார்த்தைகள் மூலமே தீர்வு காணப்படவேண்டும்.

கூட்டமைப்பு வருங்காலத்தில் அமைக்கும் ஆட்சியில் லஞ்சம், ஊழல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகவிருந்த அரசியல்வாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

இளம் அரசியல் வாதிகளும், நாட்டுக்குச் சேவையாற்றும் நல்லெண்ணம் கொண்டவர்களும் எதிர்வரும் தேர்தலில் போட்டியிட கூடுதலாக நியமனம் வழங்கப்படுவார்கள் என்றும் சனாதிபதி கூறியுள்ளார்.

### காலஎல்லை நீடிப்பு

பொதுத் தேர்தலுக்கான தபால மூல வாக்கெடுப்பிற்கான கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது என்று சிறிலங்கா தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார். நேற்று முதல் ஒரு வார காலம் இந்தகாலஎல்லை நீடிக்கப்படவுள்ளது தேர்தல் விண்ணப்பத்திற்கான மாதிரி படிவங்கள தேர்தல் பதிவாளர் அலுவலகங்களில் பார்வைக்குவைக்கப்பட்டுள்ளன.

# வர்த்தக உறவின் அபிவிருத்தியை பொதுத் தேர்தலே தீர்மானிக்கும்

## -அமெரிக்கப் பிரதிநிதி கருத்து

(கொழும்பு)

சிறிலங்காவிற்கும் அமெரிக்காவுக்குமிடையிலான வர்த்தக உறவுகள் அபிவிருத்தியடைவதை பொதுத் தேர்தலே தீர்மானிக்கும் என்று அமெரிக்காவின் வர்த்தக விவகாரங்களுக்கான பிரதிநிதி றொபேட் கூறியுள்ளார்.

தென்னிலங்கையில் அரசியல் நெருக்கடிகள் காரணமாக புதிய திட்டங்கள் வகுப்பதில் தடை ஏற்பட்டுள்ளதாகவும் தேர்தலின் பின்னரே இது குறித்து எதுவும் கூறமுடியும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# வாஷிங்டனில் இன்றைய மீளாய்வு மாநாட்டில் சிறிலங்காவின் பிரதிநித்துவத்திற்கு இடமில்லை

(கொழும்பு)

டோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டின் முன்னேற்றம் தொடர்பாக வாஷிங்டனில் இன்று நடைபெறவுள்ள மீளாய்வு மாநாட்டில் சிறிலங்காவின் பிரதிநிதித்துவம் இடம் பெறாது என சிறிலங்காப் பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ராஜாங்கத் திணைக்கள துணைச்செயலாளர் றிச்சர்ட் ஆர்மிரேஜ் தலைமை தாங்கும் இந்த மாநாட்டில் டோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டின் இணைத் தலைமை தாங்கிய நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர்.

மேற்படி மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு சிறிலங்கா அரசிற்கு அழைப்பு எதுவும் அமெரிக்க தரப்பில் இருந்து விடுக்கப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# மனையியல் கூடம், நூலகம் பூநகரி வி.வி.யில் திறப்பு

(பூநகரி)

பூநகரி விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் புதிய மனையியல் கூடம், நூல் நிலையம் என்பன கடந்த வெள்ளிக் கிழமை திறந்து வைக்கப்பட்டது.

மங்கள விளக்கினை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் மற்றும் பூநகரி தியாக தீபம் மருத்துவமனை மருத்துவர் நளாயினி ஏற்றினர். தேசியக் கொடியை பூநகரி கடற்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் ஏற்றினார்.

நெக்கோட் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட மனையியல் கூடத்தை பொறியியலாளர் குகதாஸ் திறந்து வைத்தார். நூலகத்தை கோட்டக்கல்விப் பணிப்பாளர் தி.கணபதிப்பிள்ளை திறந்து வைத்தார்.

தொடர்ந்து வலயக் கல்விப் பணிப்பாளர் ஆசியுரை வழங்கினார். (34)

# உரியவர் பெற்றுக் கொள்க!

(முல்லைத்தீவு)

கடந்த வருடம் முகமாலைக்கான சேவையில் ஈடுபட்டிருந்த பயணிகள் பேருந்தில் கண்டெடுக்கப்பட்ட பெண்களுக்குரிய கைப்பை மற்றும் தேசிய அடையாள அட்டை என்பவை முல்லைத்தீவு காவல் துறை பணிமனையில் ஒப்படைக்கப்பட்டு தற்போதும் உள்ளன.

பேருந்தில் தவறவிடப்பட்டிருந்த இவற்றை பேருந்து சாரதி காவல்துறையில் ஒப்படைத்திருந்தார். உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். (20)

# தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட சர்வதேச அமைப்புக்களுக்கு அழைப்பு

## -மார்ச் பிற்பகுதியில் கொழும்பு வருகை

(கொழும்பு)

பொதுத்தேர்தல் நடவடிக்கைகளை கண்காணிக்கும் பொருட்டு, சர்வதேச கண்காணிப்பாளர்களை அழைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு விட்டதாக உதவி தேர்தல் ஆணையாளர் டி.சேனநாயக்க கூறியுள்ளார்.

இதனை முன்னிட்டு ஆசிய தேர்தல் அதிகாரசபை, ஐரோப்பிய ஒன்றியம், பொதுநலவாய நாடுகள் ஆகிய சர்வதேச அமைப்புக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக கூறியஅவர்,

இதனைவிட பாகிஸ்தான், பாக்தாத் தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கும் இம்முறை அழைப்பு விடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

அதேநேரம் இந்தியாவில் தேர்தல் நடைபெறவுள்ளதால் அங்கிருந்து தேர்தல் கண்காணிப்பாளர்களை அழைக்கும் நோக்கம் இல்லை என்று தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாடுகளின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் மார்ச் மாதப் பிற்பகுதியில் சிறிலங்கா வருவார்கள் என்று உதவித் தேர்தல் ஆணையாளர் கூறியுள்ளார்.

# ஊரகஎழுச்சிப்பேரவை சங்கமம்

(மல்லாவி)

யோகபுரம் மத்தி ஊரக தேசிய எழுச்சிபேரவையின் பொதுக் கூட்டம் கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் துணுக்காய் பிரதேச தேசிய எழுச்சிப்பேரவை துணைச் செயலாளர் த.சுந்தரலிங்கம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

2004ஆம் ஆண்டுக்கான இனம் காணப்பட்ட அபிவிருத்தி வேலைத் திட்டங்களை செயற்படுத்தல், பேரவையின் குறிக்கோள், நோக்கங்களை நிறைவேற்ற சமகால நிலவரங்கள் பற்றி கருத்துக்களை பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் அமிர்தலிங்கம் துணுக்காய் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் த.தர்மேந்திரா ஆகியோர் வழங்கினார்

இந்நிகழ்வில் கிராம அபிவிருத்திச் சங்கம்,மாதர் அபிவிருத்திச் சங்கம்,கமக்கார அமைப்பு, சமூகபொருளாதார அபிவிருத்திக் குழு, ஊரக தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள், கிராம மக்கள் என பலர் கலந்து கொண்டனர். (24)

# அனைத்துலக பெண்கள் தினத்தையொட்டி மன்னாரில் மெய்வல்லுனர் போட்டிகள்

(மன்னார்)

அனைத்துலகப் பெண்கள் தின மெய்வல்லுனர் போட்டிகள் நேற்று முன்தினம் மன்னார் பொது விளையாட்டரங்கில் காலை 10.00மணிக்கு ஆரம்பமாகின. இதில் பொதுச் சுடரை மன்னார் கல்வி வலயப் பணிப்பாளர் ம.ஆமேல்எவல் ஏற்றிவைத்தார் தேசியக்கொடியை மன்னார் மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வி நிலவரசி ஏற்றினார்.

விளையாட்டுப் போட்டிகளை வங்காலை மத்தியமகாவித்தியாலய அதிபர் திருமதி கே.மாலினி ஆரம்பித்து வைத்தார். சிறப்பு விருந்தினராக பெண்கள் தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் செல்வி ஆரபி கலந்து கொண்டார்.

இப்போட்டிகளை மன்னார் மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் கவியாளன் நெறிப்படுத்தினார் பிற்பகல் பரிசளிப்பு விழா இடம்பெற்றது. இப்பரிசளிப்பு விழாவில் ஆரபி தலைமை வகித்தார். பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட முதல் மாவீரரின் சகோதரியும் வங்காலை மத்திய மகாவித்தியாலய அதிபருமான கே.மாலினியும் கலந்து கொண்டு உரையாற்றினர். சிறப்பு விருந்தினராக மன்னார் கமத்தொழில் சங்கங்களின் பணிப்பாளர் திருமதி டிமேல்குறூஸ், அரச சார்பற்றஇணையங்களின் தலைவர் ச.மருதநாய கம்குறூஸ் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர் வெற்றியீட்டிய வீராங்கனைகளுக்கு பரிசில்களும் கேடயங்களும் வழங்கப்பட்டன. (மி)

# மேசன், தச்சுவேலை பயிற்சிக்கு விண்ணப்பிக்க வேண்டுகோள்

கண்டாவளை பிரதேசசெயலர் பிரிவில் மேசன், தச்சு வேலை பயிற்சி நெறிக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

புனர்வாழ்வளிப்பு அகதிகள் மீள்குடியமர்த்துகை அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் திட்டத்திற்கமைய 18-35 வயதினையுடைய ஆண்கள் மட்டும் இதற்குசேர்த்துக் கொள்ளப்படவுள்ளது.

6மாதகால பயிற்சி நெறிக்கான ஆட்களை தெரிவு செய்வதற்கான விண்ணப்பத்தினை பிரதேச செயலகத்தில் பெற்று பூர்த்தி செய்து உடன் தந்துதவுமாறு கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் சீ.சிவசொருபநாதபிள்ளை கேட்டுக் கொண்டுள்ளார்.

### மதிய உணவு வழங்க ஏற்பாடு

(திருமலை)

வடக்கு-கிழக்கு மாகாண பாடசாலைகளில் உலக உணவுத் திட்டத்தின் அனுசரணையுடன் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் மாணவர்களுக்கான உணவூட்டல் செயற்திட்டத்தின் கீழ் இரண்டாம் தவணையில் 1,07,363 மாணவர்களுக்கு மதிய உணவு வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வடபகுதியைச் சேர்ந்த 59,134 மாணவர்களுக்கும் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த 48,229 மாணவர்களுக்கும் மதிய உணவு வழங்கப்படவுள்ளது.


# ஏலவிற்பனை

| | | |
|---|---|---|
| எல்ப்வான் | - | த12-9835 |
| இயந்திர இலக்கம் | - | 3எல்-2846360 |
| அடிச்சட்ட இலக்கம் | - | எல்எச்-123-0008732 |

கிளிநொச்சி கல்விக்கழகத்திற்குரிய ஓடக்கூடிய நிலையிலுள்ள மேற்படி எல்ப் வான் ஏலவிற்பனைக்கு விடப்படுகிறது. இவ்வாகனம் கிளிநொச்சி கல்வி அலுவலகத்தில் வைத்து 21-02-2004 காலை 09.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விடப்படும்.

மேற்படி வாகனத்தைப் பார்வையிட விரும்புவோர் 18-02-2004 - 20-02-2004 திகதிகளில் அலுவலகநாட்களில் காலை 8.30 தொடக்கம் மாலை 4.00 மணிவரை வலயக்கல்வி அலுவலகத்தில் பார்வையிடலாம்.

ப. அரியரத்தினம்,
வலயக்கல்விப் பணிப்பாளர் ,
கிளிநொச்சி.

(சி-8790)



சிந்தனைக்கு

எதிரியைவிட துரோகிகளே ஆபத்தானவர்கள்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 17 -02-2004

# வரவேற்கத்தக்கது

யாழ்.குடாநாட்டு அரசியலில் இருந்து முன்னாள் இந்து கலாச்சார அமைச்சரும், ஐ.தே.பாராளுமன்ற உறுப்பினருமான தி.மகேஸ்வரன் விலகுவதாக அறிவிப்புச் செய்துள்ளமை வரவேற்கத்தக்கதும், பாராட்டத்தக்கதுமானதொரு விடயமே.

ஏனெனில் தனது விலகலுக்காக தி.மகேஸ்வரன் தெரிவித்துள்ள காரணமானது இன்றைய அரசியற் சூழ்நிலையை அவர் நன்கு விளங்கிக் கொண்டதானதொரு முடிவு மட்டுமல்ல, தமிழ் மக்களின் உணர்வுகளை அவர் புரிந்துகொண்டுள்ளதன் வெளிப்பாடு என்றே கொள்ளத்தக்கதாகும்.

தி.மகேஸ்வரனின் கடந்தகால அரசியல் நடவடிக்கைகள் எத்தகையதாக இருந்திருப்பினும், அவர் தற்பொழுது எடுத்துள்ள முடிவானது சில அரசியல் வாதிகளுக்கு முன்னுதாரணமாகக் கொள்ளத்தக்கதாகும். அதாவது தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்தல் என்பது உணர்த்தப்பட்டுள்ள சம்பவமாகவே இது கொள்ளத்தக்கதாகும்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில், தமிழ் மக்கள் ஒரே அணியில் திரள்தல் வேண்டும் என்பதே தமிழ் மக்களிடம் காணப்படும் பொதுவான உணர்வாகும். அத்தோடு, இன்றைய அரசியற் சூழ்நிலையில் அது அவசிய தேவையானதொன்றாகவுமே உள்ளது. இவ்வாறான தேவைக்கு இரண்டு காரணங்கள் உண்டு.

ஒன்று சர்வதேச ரீதியில் இன்று தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டம் குறித்த அக்கறையும், ஆர்வமும் அதிகரித்துள்ள வேளை தமிழ் மக்கள் தங்கள் குரலை ஏகோபித்த ரீதியில் சர்வதேசத்திற்கு வெளிக்காட்டுதல் அவசியமாகும். இதன் காரணமாக முரண்பாடுகள் நீக்கப்பட்டு தமிழ்மக்கள் ஓரணியில் திரளுதல் வேண்டும். மாறாக இதற்கு எதிரான சக்திகள் ஓரங்கட்டப்படுதலும்வேண்டும்.

இரண்டாவதாக இன்று சிறிலங்காவில் பௌத்த-சிங்கள பேரினவாத சக்திகளைக் கிளர்ந்தெழச் செய்வதற்கான முயற்சிகள் பெரும் எடுப்பில் சில அரசியல் சக்திகளால் மேற்கொள்ளப்படுகின்றது. குறிப்பாக ஜே.வி.பி.அத்தகைய நடவடிக்கைகளில் தீவிர முனைப்புக் காட்டிவருகின்றது. ஆகையினால் சர்வதேசத்திற்கு புரியவைப்பதற்காக மட்டுமல்ல பேரினவாத சக்திகளுக்கு தமது ஒற்றுமையையும் தமது எதிர்ப்பையும் வெளிப்படுத்தும் வகையில் தமிழ்மக்கள் ஓரணியில் திரளுதல் வேண்டியுள்ளது. இந்நிலையில் தேசியக்கட்சியின் பெயரில் தமிழர் தாயகத்தில் போட்டியிடுவதில் இருந்து விலகிக் கொள்வதோடு தமிழ் மக்களின் ஒற்றுமைக்கு உறுதுணையாக அரசியலில் இருந்து ஒதுங்கியிருக்க தி.மகேஸ்வரன் எடுத்துள்ள முடிவு முன்னேற்றகரமானதே.

ஆனால், மகேஸ்வரன் போன்றவர்கள் இத்தகைய தீர்மானத்தை மேற்கொள்கையில் இன்னமும் சிலர் அதிகார அபிலாசை காரணமாகவும், சுகபோக வாழ்வு காரணமாகவும் தமிழ் மக்களின் ஒற்றுமைக்கும், உணர்விற்கும் எதிராகச் செயற்பட முற்பட்டுநிற்கின்றமையும் இல்லாமல் இல்லை.

எடுத்துக் காட்டாக இன்று தமிழ மக்களின் உரிமைக்கான போராட்டத்தை முற்றிலுமாக நிராகரிப்பதுபோன்ற நிலைப்பாட்டையும், தற்போதைய யுத்தநிறுத்த உடன்பாடு, சமாதானப் பேச்சுவார்த்தைகள் போன்றவற்றிற்கு மாறான நிலைப்பாட்டையும் மேற்கொண்டுள்ள ஜே.வி.பி. போன்ற இனவாத சக்திகளுடன் கூட்டுச்சேரவும், அத்தகைய சக்திகள் அரசாங்கம் ஒன்றை அமைப்பதை ஆதரிக்கவும் டக்ளஸ் தேவானந்த போன்றவர்கள் இருக்கவே செய்கின்றனர்.

அதேசமயம், தமிழர் ஒற்றுமையை வெளிப்படுத்தும் நோக்கில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எனப் பல கட்சிகள் முற்பட்டு நிற்கையில் அதற்குள் இருந்து கொண்டே அதன் நோக்கத்திற்கு மாறான செயற்பாடுகளையும், முட்டுக்கட்டைகளையும் ஏற்படுத்துவதற்கு முனையும் சக்திகள் கூட இல்லாமல் இல்லை. இதில் ஆனந்தசங்கரி போன்றவர்கள் சட்டத்திலுள்ள ஓட்டைகளைப் பயன்படுத்தி தமிழர்களின் ஒற்றுமைக்கே இடையூறு விளைவிக்கப் பார்க்கின்றனர்.

இவர்களின் இந்நடவடிக்கையானது இவர்களின் அதிகார அபிலாசைகள் காரணமானதாக இருப்பினும்சரி, அந்நிய சக்திகளின் தூண்டுதலினால் ஏற்பட்டதாக இருப்பினும்சரி, தமிழ்மக்களின் உணர்வுகளுக்கு ஏற்றதாக இருக்கப் போவதில்லை.

ஆனால் ஒன்று, தமிழ்மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காதவர்கள், தமிழ்மக்களினால் ஓரம் கட்டப்படுவார்கள் என்பது நிச்சயமானது. அத்தோடு, இவர்களின் இனத்துரோக நடவடிக்கையானது, சிங்களப் பேரினவாத சக்திகளுக்கு தூண்டுகோலாக அமையக்கூடியதாகும். இவர்களை வைத்து தமிழினத்திற்கு எதிராக தமது நடவடிக்கைகளுக்கு அவர்கள் நியாயம் கற்பிக்க முயலவும் கூடும். இம்முயற்சி வெற்றிபெறப்போவதில்லை. ஆயினும், இவர்களின் நடவடிக்கைகளினால் சிறு சலசலப்புக்கள் சிலவேளைகளில் ஏற்பட வாய்ப்புண்டு.

# மக்களுக்கு வழங்க உத்தேசித்திருந்த நன்மைகள் சனாதிபதியின் செயலால் இழக்கப்பட்டுள்ளன

## -அமைச்சர் ராஜித சேனாரட்ன

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி வடக்கு - கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களை மறந்து எதிர்கால வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியாது என காணி அமைச்சர் ராஜிதசேனாரட்ன தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர் பொதுசன ஐக்கிய முன்னணியின் முன்னாள் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் விரைவில் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்ளவுள்ளனர்.

இதற்கான இறுதி ஏற்பாடுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. மக்களுக்குஅரசாங்கம் வழங்க உத்தேசித்திருந்த பல நன்மைகள் சனாதிபதி நாடாளுமன்றத்தை கலைத்தமை காரணமாக விலகிச் சென்றுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியின் கீழ் உரிய பொருளாதாரத் திட்டம் முன்னெடுக்கப்படும் என முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். கேகாலையில் நேற்று முன்தினம் நிகழ்வு ஒன்றில் அவர் உரையாற்றினார். நாடு இன்று பெரும் கடன் சுமையில் தவிக்கிறது. இந்நிலையில் சர்வதேச நாணய நிதியத்தின் உத்தரவின்படி நாட்டின் பொருளாதாரத்தை மாற்றியமைக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.(32)

# அனுருத்த ரத்வத்தவுக்கு பலமளிக்க பிரபல பௌத்த பிக்குகள் முயற்சி!

முன்னாள் பாதுகாப்பு அமைச்சரான அனுருத்த ரத்வத்தவை ஆசிர்வதிக்கும் பொருட்டும் அவரின் தேர்தல் நடவடிக்கைகளை பலப்படுத்தும் வகையிலும் நாடெங்கிலுமுள்ள பிரபலபிக்குமார்கள் இணைந்து கண்டிக்குச்செல்ல தீர்மானித்துள்ளனர்.

வடக்கு-கிழக்குப்பிரதேசங்களில் யுத்தத்தில் அவர் ஆற்றிய சேவைகளையும் யாழ்கோட்டையை மீளக்கைப்பற்றியமைக்கும் அவர் அளித்த பங்களிப்புக்கு மதிப்பளிக்கும். வகையில் அவருக்கு ஆசிர்வாதம் செய்வது அவசியம் என பிக்குமார்கள் கருதுவதால் இப்பயணம் நடைபெறவுள்ளது.

மேலும் கண்டி மாவட்டத்தில் அவர் அமோக வெற்றியீட்டவேண்டுமெனவும் தேரர்கள் கூறியுள்ளனர். வீரமிகுபடையினரை வழிகாட்டி பல ஆபத்துக்களையும் சந்தித்தும் சேவையாற்றியவகையில் அவரை ஆசிர்வாதிக்க கண்டிக்குவருவது மிக அவசியம் என்று பாலிக பௌத்த பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியர் கும்புருகமுவதேரர் தெரிவித்துள்ளார்.

# வாக்களிப்பு நிலையத்தில் மோசடியெனின் மாவட்ட தேர்தல் முடிவுகள் நிறுத்தப்படும்!

(கொழும்பு)

இம்முறை நடைபெறும் தேர்தலின் போது எந்தவொரு வாக்கு நிலையத்திலேனும் மோசடிகள் நடைபெறுமாயின்அதை ரத்துச் செய்து விட்டு இரு வாரங்களில் மீண்டும் சம்பந்தப்பட்ட நிலையத்துக்கு மட்டும் வாக்கெடுப்பு நடத்த தேர்தல் ஆணையாளர்தயானந்தா திஸாநாயக்க தீர்மானித்துள்ளார்.

அத்துடன அவ்வாறான மீள் வாக்களிப்பு நடத்தப்பட்டு முடியும் வரை மாவட்டத்தின் தேர்தல் முடிவுகள் அறிவிப்பும் ஒத்திப் போட ஆணையாளர் தீர்மானித்துள்ளார். இம் முடிவு பற்றி அவர் அவரது அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அனைத்து மாவட்டத் தேர்தல் ஆணையாளருக்கும் மாவட்ட செயலாளருக்கும் அறிவித்துள்ளார்.

உயர் நீதி மன்றம் அளித்த உத்தரவிற்கு இணங்க ஆணையாளர் மேற்படி நடவடிக்கை எடுக்க முடிவு செய்துள்ளார். இந்த நடவடிக்கை முதல் தடவையாக எடுக்கப்படும் ஒன்றாகும்.

# ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நிறைவேற்றுச் சபை இன்று கூடும்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலாவது நிறைவேற்றுச் சபைக் கூட்டம்இன்று நடைபெறவுள்ளது.

கூட்டமைப்பின் பதவிகளுக்கு நிலவும் வெற்றிடங்களுக்கு உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பாக இங்கு கவனம் செலுத்தப்படும் என அதன்பிரதான செயலாளர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் பதவி உட்பட பல பதவிகளுக்கு தற்போது வெற்றிடங்கள் நிலவிவருகின்றன. இந்த விடயம் உட்பட எதிர் வரும்பொதுத் தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பாகவும் இங்கு விரிவாக கலந்துரையாடப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## ஊர்சுற்றும் போட்டியில் 2-ம், 5-ம் இடங்களை கிளிநொச்சி மாவட்டம் கைப்பற்றியது

(அலுவலக செய்தியாளர்)

திருகோணமலையில் கடந்த 14ஆம் திகதியன்று நடாத்தப்பெற்ற ஊர்சுற்றும் போட்டியில் கிளி. மாவட்டத்தைச் சேர்ந்த இருவர் தெரிவு செய்யப்பெற்றுள்ளனர். மேற்படி போட்டியில் எஸ். இராஜேந்திரம் இரண்டாமிடத்தினையும், வி. நிலாசின்டிவனியா ஐந்தாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# பள்ளிமுனை லூசியா விளையாட்டுக்கழக உதைபந்தாட்ட அணி இறுதிப் போட்டிக்குத் தெரிவு

அகிலஇலங்கை உதைபந்தாட்ட சம்மேளத்தினால் நடத்தப்பட்டு வந்த சார்க்கிண்ணத்துக்கான தேசிய உதைபந்தாட்டப் போட்டியில் மன்னார் பள்ளிமுனை லூசியா விளையாட்டுக்கழகம் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.

கொழும்பு தெஹிவளை நகர விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் அந் நகரவிளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆடிய மன்னார் அணி3-0 என்ற எண்ணிக்கையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவானது (மி)

# பாரீஸ் பகிரங்க டென்னிஸ்; ஹிம் கிளிஸ்ரஸ் சாம்பியன்

பாரீஸ் பகிரங்க டென்னிஸ் போட்டியில் மகளிருக்கான சாம்பியன் பட்டத்தை முதல் வரிசை ஆட்டக்காரர் ஹிம் கிளிஸ்ரஸ் வென்றுள்ளார்.

இறுதிப்போட்டியின் போது மேரி பிரியஸை 6:2,6:1 எனும் செட்கணக்கில் ஹிம் கிளிஸ்ரஸ் தோற்கடித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவில் ஓப்பன் டென்னிஸ் இறுதிப் போட்டியில் ஜஸ்டின் ஹெனினிடம் தோற்றுப் போன ஹிம் கிளிஸ்ரஸ்க்கு இந்த வெற்றி ஒரு உந்து சக்தியாகும்.

அடுத்தவாரம் மற்றொரு டென்னிஸ் போட்டியில் ஜஸ்டின் ஹெனினை எதிர்த்து விளையாடவுள்ளார்.



# சு.கட்சியுடன் சேர்ந்த கட்சிகள் இறுதியில் அழிந்ததே வரலாறு

## -முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க

(கொழும்பு)

வரலாற்றில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டமைப்பை ஏற்படுத்திக்கொண்ட அனைத்துக் கட்சிகளும் இறுதியில் அழிவடைந்துள்ளன. என்று சிறிலங்காவின் முன்னாள் பிரதமரும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

அதனால் மக்கள் விடுதலை முன்னணிக்கு இவ்வாறான எதிர்காலம் ஒன்று ஏற்படக்கூடாது என நான் பிரார்த்திக்கின்றேன் எனவும், பயாகல சிறிலங்கா சுதந்திரக்கட்சி அலுவலகத்தை திறந்து வைத்து உரையாற்றுகையில் கூறினார்.

முன்னாள் பிரதமர் பண்டாரநாயக்க 56 ஆம் ஆண்டு கூட்டமைப்பொன்றை ஏற்படுத்தினார். அறுபதுகளில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க கூட்டமைப்பொன்றை ஏற்படுத்தினார். அதற்குப் பின்னரும் கூட்டமைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டன. இந்தக்கூட்டமைப்புக்களை ஏற்படுத்திக்கொண்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி தொடர்ந்தும் அவ்வாறே இருக்கின்றது. எனினும் இணைந்து கொண்ட ஏனைய கட்சிகள் அழிவடைந்து விட்டன. நாம் ஒருபோதும் அழிவடையவில்லை என்று கூறினார்.

# மலையகத்தில் பிரஜா உரிமை கிடைத்தும் 160, 000 பேர் வாக்களிக்க முடியாத நிலையில்

(கொழும்பு)

சனாதிபதியின் திடீர்த் தேர்தல் அறிவிப்பால் புதிதாக பிரஜா உரிமைகள் பெற்ற 1,60,000 மலையக தோட்டத் தொழிலாளர்கள் வாக்களிக்கும் தகுதி அற்றவர்களாக உள்ளார்கள் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் யோகராசன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜூன் மாதத்திற்கு முன்னதாக இவர்கள் அனைவரையும் வாக்காளர் பட்டியலில் பதிவு செய்ய நடவடிக்கை எடுத்துள்ள வேளையில் பாராளுமன்றம் திடீரென கலைக்கப்பட்டதால் இவர்கள் வாக்குரிமை அளிப்பதற்கு தகுதி அற்றவர்களாக உள்ளனர். இது சனாதிபதியால் மேற்கொள்ளப்பட்ட ஒரு துரோக செயல் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# மங்கள சமரவீரவிற்கெதிரான வழக்கு நேற்று தள்ளுபடி

பொதுசன ஐக்கிய முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர ஊழல் ஒன்றில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாகல ரட்நாயக்காவின் ஆதரவாளர்களைத் தாக்கிய குற்றச்சாட்டு மங்கள சமரவீர மீதும், மேலும் ஐவர் மீதும் சுமத்தப்பட்டிருந்தது. எனினும், உரிய சாட்சியங்கள் இல்லாமையால் வழக்கை இன்று மாத்தறை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. (32)

# ஐ.சு.ம.விடுதலை முன்னணி ஆட்சிக்குவரின் சமாதானப் பேச்சை விரிவான அடித்தளத்தில் ஆரம்பிக்கும்

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய சுதந்திர மக்கள் விடுதலை முன்னணி பதவிக்கு வந்தால் அது சமாதான பேச்சுக்களை விரிவான அடித்தளத்தில் ஆரம்பிக்கும் என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நோர்வே தேசிய தொலைக்காட்சிக்கு அவர் அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இரண்டு ஆண்டு காலமாக நடைபெற்ற சமாதான பேச்சுக்களில் ஏற்பட்ட அனுபவக் குறைபாடுகள் என்பனவற்றைக் கவனத்திற் கொண்டு இதுபற்றி திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் குறைபாடுகள் காரணமாக சமாதான முயற்சி பற்றி தெற்கில் வாழும் மக்கள் அச்சம் கொண்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

சமாதான முயற்சியின் ஆரம்பக் கட்டத்தில் கூட எதிர்க்கட்சி பிரதிநிதி ஒருவரை சேர்த்துக் கொள்ளாமல் விட்டமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விட்ட பாரிய அரசியல் தவறு எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்மக்களின் பிரச்சினை தொடர்பாக ஒவ்வொரு அரசியல் கட்சியும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சி சமாதான முயற்சியை ஒரு அரசியல் திட்டமாகப் பயன்படுத்தியமை கவலைக்குரியது என்று மகிந்த ராஜபக்ஷ தனது பேட்டியில் தெரிவித்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

எதிர்காலத்தில் சமாதானப் பேச்சுக்களில் சகல பிரதான அரசியற் கட்சிகளையும் செயற்பாட்டு ரீதியில் ஒன்றிணைப்பது அவசியம் என்றும் சிறிலங்காவில் சமாதான முயற்சிக்கு ஆதரவு வழங்கும் நோர்வே உள்ளிட்ட ஸ்கண்டி நேவிய நாடுகளுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பாராட்டுத் தெரிவித்துள்ளதோடு சனநாயக முறையில் சுலபமாக கண்காணிப்பு நடவடிக்கைகளையும் தொடர்ந்து மேற்கொள்வது அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஐ.தே. கட்சி 22 மாவட்டங்களிலும் வேட்பு மனுக்கள் தாக்கல்

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தலில் 22 மாவட்டங்களிலும் போட்டியிட ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித் துள்ளது. வேட்பு மனுக்களை கொழும்பு, கம்பகா, களுத்துறை, மகநுவர, மாத்தளை, நுவரெலியா, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், வன்னி, மன்னார், திகமடுல்ல, திருகோணமலை, குருணாகல, புத்தளம், அநுராதபுரம், பொலநறுவை, பதுளை, மொனராகல, இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளது என மலிக் சமரவிக்கிரம கூறினார்.

# கொழும்பு மாவட்ட ஓய்வூதியர் சங்கம் ஐ.ம.சு. முன்னணிக்கே ஆதரவாம்

(கொழும்பு)

கொழும்பு மாவட்ட ஓய்வூதியர் சங்கம் எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு தமது ஆதரவை வழங்க தீர்மானித்துள்ளது. அலுபோவிலவில் நடந்த கூட்டமொன்றில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

ஐக்கிய தேசிய முன்னணியின் வரவு செலவுத்திட்டம் திருப்திகரமாக அமையவில்லை. ஓய்வூதியக்காரர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர் 65% மான ஓய்வூதியக்காரர் 5000/= ற்கு குறைவான சம்பளமே பெறுகின்றனர். தற்போதைய சம்பள உயர்வில் இவர்கள் 500 ரூபாவையே மேலதிகமாக பெறுகின்றனர். அரசாங்கத்தால் உத்தியோகத்தர்களுக்கு 1250/= வழங்கப்பட்ட போதும் ஓய்வூதியர்களுக்கும் அதை வழங்குவதால் எவ்வித பாதிப்பும் இல்லை. நாட்டில் 375.000 ஓய்வூதியர்கள் இருக்கிறார்கள். அவர்களில் ஒருஇலட்சம் பேர் அரசாங்கத்தை மாற்றப்போதும் என ஓய்வூதிய சங்கத்தின் செயலாளர் குணவர்த்தன கூறினார்.

# சு.கட்சியின் மா.சபை, பி.சபை உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக்கட்சியில் இணைவு

(கொழும்பு)

கம்பகா மாவட்டத்தைச் சேர்ந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதேச சபை உறுப்பினர் பாலிதலிகினிய குமார ஐக்கிய தேசிய கட்சியில் இணைந்துள்ளார்.

இவர் 1986 ஆம் ஆண்டு சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் அங்கத்தவராக இணைந்தவர். 2002 ஆம் ஆண்டு தேர்தலில் கூடுதலான வாக்குகளைப் பெற்றுக் கொடுத்தவர் சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஜே.வி.பி யுடன் கூட்டு சேர்வதை எதிர்க்கும் இவர் இக்கூட்டு ஒப்பந்தத்தால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தனித்துவம் இழக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

இதேவேளை பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த மாகாண சபை உறுப்பினர்கள் மூவரும் பிரதேச சபை உறுப்பினர் ஒருவரும் நேற்று ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டனர்.

இவர்களில் வடமேல் மாகாண சபை தலைவர் உட்பட மூன்று உறுப்பினர்களும்,அத்தனகல பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவரும் இடம்பெற்றுள்ளனர். இவர்கள் ஐ.தே.க.வின் தலைவர் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவிடம் கட்சி உறுப்புரிமையைப் பெற்றுக் கொண்டுள்ளார்கள்.

# சு.சே.தொ.சங்கத்தின் வேலை நிறுத்த போராட்டம் இடைநிறுத்தம்

(கொழும்பு)

சுகாதார சேவைகள் தொழிற் சங்க முன்னணி தமது வேலை நிறுத்தத்தைத் தற்காலிகமாக இடைநிறுத்துவது என்று தீர்மானித்துள்ளது.

சுமார் ஐயாயிரம் சுகாதாரத்துறை ஊழியர்கள் சம்பள முரண்பாடுகளை நீக்குமாறு கோரி நேற்று சுகாதார அமைச்சின் முன்னால் திரண்டனர்.

இவர்களிடம் சுகாதார அமைச்சின் செயலாளரின் கையெழுத்துடன் சுற்றுநிருபம் ஒன்று கையளிக்கப்பட்டது.

சுகாதார சேவையின் எந்த ஒருபிரிவு குறித்தும் தனிப்பட்ட தீர்மானத்தை எடுப்பதில்லையென்று சுகாதார அமைச்சரவையும் அமைச்சரவை உபகுழுவும் இணங்கி உள்ளன.

உபகுழு சம்பள முரண்பாட்டை பூரணமாக 2005 ஆம் ஆண்டு சனவரி மாதம் அளவில் நீக்குவதற்கு இணங்கியுள்ளது.

இதேவேளை திருத்தங்களுடனான சுற்று நிருபம் ஒன்று இன்னும் 24 மணிநேரத்திற்குள் வெளியிடப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சுகாதார ஊழியர்கள் தொடர்பாக முன்னர் வந்த செய்திகள் ஐந்தாம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

## 3 கோவில்கள்...

1999ஆம் ஆண்டின் இறுதிப் பகுதிகளில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கைகளையடுத்து இப்பிரதேச மக்கள் முற்றாக இடம் பெயர்ந்துள்ளதுடன், அவர்களது கிராமங்கள் உயர் பாதுகாப்பு வலயமாக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (27)

## த.கூ...

இச்சந்திப்புக் குறித்துக் கருத்துக் கூறிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வன்னியில் விடுதலைப்புலிகளின் தலைமைத்துவத்துடன் முக்கிய சந்திப்பு ஒன்றில் நாம் செவ்வாய்க்கிழமை (இன்று) பங்குபற்றுகின்றோம் முக்கிய முடிவுகள் அச்சந்திப்பில் எடுக்கப்படவுள்ளன என்றார்.

## கிறிஸ்தவ....

கான மேலதிகப் பாதுகாப்பை நீக்கி அவர்களுக்கும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பாதுகாப்பை வழங்குமாறு சனாதிபதி பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வாவிற்கு அறிவித்துள்ளார்.

## விகாராமாதேவி...

மென எதிர்பார்ப்பதாக தேரர் கூறியுள்ளார் இந்தப் பதிலைப் பொறுத்தே பொதுத் தேர்தலில் எவ்வாறு நடந்து கொள்வது என்று பேரவை தீர்மானிக்கும் என்று கூறியுள்ளார்.

அத்துடன் தமது அங்கீகாரத்திற்குரிய 10பேரை நாடாளுமன்றத் தேர்தல் வேட்பு மனு பட்டியலில் பட்டியலில் எந்தக்கட்சி சேர்த்துக் கொள்கிறதோ அந்தக் கட்சிக்கு தாம தேர்தலில் ஆதரவளிப்போம் என்றும் இவ் அமைப்பு அறிவித்துள்ளது.

# "ஜாதிக ஹெல உறுமய" என "சிஹல உறுமய" பெயர் மாற்றம்!

(கொழும்பு)

சிஹல உறுமய கட்சியின் பெயர் மாற்றப்பட்டு "ஜாதிகஹெல உறுமய" என்ற புதிய பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இதை தேர்தல் ஆணையாளர் ஏற்றுக்கொண்டுள்ளார் என கட்சி யின் செயலாளர் அறிவித்துள்ளார். இம்முறை பொதுத்தேர்தலில் சிஹல உறுமயக்கட்சி தலைவர் திலக்கருணாரத்ன களுத்துறை மாவட்டத் திற்கும் அதன் அமைப்பாளர் சம்பிக்கரணவிக்க கொழும்பு மாவட்டத்திற்கும் போட்டியிடப்போவதாக அறிவித்துள்ளனர்.

## இருவர் கைது

கெக்கிராவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியை கத்தியால் குத்த முற்பட்ட இருவர் இன்று கைதுசெய்யப்பட்டனர்.

தனிப்பட்ட விவகாரம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட ஒருவரை விடுவிக்கக் கோரி பொலிஸ் நிலையத்திற்குள் பிரவேசித்த பொதுஜன ஐக்கிய முன்னணியின் மாகாண சபை உறுப்பினர் ஒருவரின் உறவினரும் முன்னாள் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர். (32)

## சாரதி சரணடைந்தார்

யாழ்.கண்டிவீதியில் கைதடிப் பகுதியில் அண்மையில் இடம் பெற்ற வாகன விபத்தையடுத்து தலைமறைவாகியிருந்த குறித்த வாகனச்சாரதி சாவகச்சேரி நீதவான் முன்னிலையில் சரணடைந்துள்ளார்.

சட்டத்தரணியூடாக நீதவானின் வாசஸ்தலத்தில் கடந்த சனியன்று சரணடைந்த இச்சாரதியை மார்ச் 1ஆம்திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார். (27)

# சம்பந்தன், பரராஜசிங்கம் மேன்முறையீட்டு மனுசமர்ப்பிப்பு

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வி.ஆனந்தசங்கரியின் அனுமதியின்றி எந்தவொரு அரசியல் நடவடிக்கையிலும் ஈடுபடுவதற்கு தமிழர் விடுதலைக்கூட்டணியின் உறுப்பினர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த இடைக்கால தடையுத்தரவை ரத்துச்செய்யுமாறு கோரி நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன், சிரேஷ்ட உபதலைவர் ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோர் தாக்கல் செய்துள்ள இந்த மனுவில் கூட்டணியின் தலைவர் ஆனந்த சங்கரி பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ளார்.

கொழும்பு மாவட்ட நீதி மன்றம் வழங்கிய தடையுத்தரவு சட்டவிரோதமானது என உத்தரவிடுமாறு இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் மனு மீதான தீர்ப்பு அறிவிக்கப்படும் வரை மாவட்ட நீதிமன்றத்தின் தடையுத்தரவை இடைநிறுத்துமாறு உத்தர விடுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## மக்களிற்கு....

பெற்ற விங்கொமாண்டர் ராஜவிக்கிரமரட்ண ஆகியோர் கலந்து கொண்டனர்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் யாழ். அலுவலகத்தில் பிற்பகல் 2.00 மணிக்கு ஆரம்பமான இச்சந்திப்பு சுமார் ஒன்றரை மணி நேரத்திற்கு மேலாக நீடித்தது. இச் சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களிடையே பேசிய இளம்பருதி மேலும் தெரிவிக்கையில், அத்துடன் மக்களின் இயல்பு வாழ்க்கையைத் தற்போதுள்ள நிலையில் இருந்து மேலும் முன்னேற்றுவது தொடர்பாகவும் எமது அரசியல் போராளிகளது சுதந்திரமான பணிகள் மற்றும் போக்குவரத்துக்களை முன்னெடுத்தல், மீனவர்கள் மீதான கெடுபிடிகள் மற்றும் தடைகளை நீக்குதல் மற்றும் மாணவர்கள், ஆசிரியர்கள் இடையே உள்ள இராணுவ நெருக்குவாரங்களால் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் உள்ள மன உளைச்சல்களை நீக்க நடவடிக்கை எடுப்பது பற்றியும் இங்கு ஆராயப்பட்டது என இளம்பருதி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை கண்காணிப்புக் குழுவின் தலைவர் யாழ். மாவட்ட கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சசில் சந்திரபால தலைமையிலான படை அதிகாரிகளையும் பொலிஸ் உயரதிகாரிகளையும் சந்தித்துப் பேச்சு நடத்தினர். காலை 10.30 மணிக்கு போ.க.கு. குழுவின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் இடம் பெற்ற இச் சந்திப்பு சுமார் இரண்டு மணி நேரத்துக்கு மேலாக நீடித்தது. (27)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.